பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

31 07 2024 **WEDNESDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வயநாடு நிலச்சரிவு தொடர்பான எச்சரிக்கை கேரள அரசுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

2. உற்பத்திக்கு உகந்த நாடாக இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், ஆயிரத்து 921 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளுக்கு உட்பட்ட ஒரு சில இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் **Swapnil Kusale** இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

**>>>><<<<**

வயநாடு நிலச்சரிவு தொடர்பான எச்சரிக்கை கேரள அரசுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் இப்பிரச்சினை தொடர்பான கவன ஈர்ப்பு தீர்மானத்தின் போது நடைபெற்ற விவாதத்தில் குறுக்கிட்டு அவர் பேசினார்.

நிலச்சரிவு குறித்த எச்சரிக்கை கடந்த 23, 24, 25 ஆகிய தேதிகளில் கேரள அரசுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

20 சென்டிமீட்டருக்கும் கூடுதலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், நிலச்சரிவு மற்றும் மண்சரிவு ஏற்படக்கூடும் என்றும் கடந்த 26ஆம் தேதி கேரள அரசுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையிலேயே தேசிய பேரிடர் மீட்புப் படையினர் முன்கூட்டியே அம்மாநிலத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இருப்பினும் அங்குள்ள மக்களை பாதுகாப்பாக வெளியேற்ற கேரள அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு விடுத்த முன்னெச்சரிக்கை தொடர்பாக கேரள அரசு நடவடிக்கை மேற்கொண்டிருந்தால், உயிரிழப்புகள் குறைந்திருக்கக்கூடும் என்றும் அமைச்சர் கூறினார்.

இயற்கை பேரிடர் தொடர்பான முன்னெச்சரிக்கைகளை 7 நாட்களுக்கு முன்பாகவே வழங்கக்கூடிய நவீன கட்டமைப்பை, இந்தியா உள்ளிட்ட நான்கு நாடுகள் மட்டுமே கொண்டிருப்பதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>><<<<

உற்பத்திக்கு உகந்த நாடாக இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் நடைபெற்ற பட்ஜெட் மீதான விவாதத்திற்கு இன்று பதிலளித்து அவர் பேசினார்.

கூட்டாட்சி தத்துவத்தின் அடிப்படையில் மாநிலங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநில அரசுகளுக்கு வழங்கப்படும் நிதி, நடப்பு நிதியாண்டில், 22 லட்சத்து 91 ஆயிரம் கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

மாநில அரசுகளுக்கான நிதி ஆண்டுதோறும் 2 லட்சத்து 49 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்கப்பட்டு வருவதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 23 ஆயிரத்து 230 கோடி ரூபாய் செலவில் பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், 625 கிலோமீட்டர் நீளமுள்ள நெடுஞ்சாலைத் திட்டப் பணிகள் இதில் அடங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை 433 கிலோமீட்டர் நீளமுள்ள நெடுஞ்சாலை திட்டப்பணிகள் நிறைவடைந்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

சென்னை - பெங்களூரு இடையேயான விரைவுச்சாலைப் பணிகள் 7 ஆயிரத்து 525 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்

>>>><<<<

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், ஆயிரத்து 921 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னை கொளத்தூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - மு.க.ஸ்டாலின் 44 செகண்ட்ஸ்)

**>>>><<<<**

தமிழகத்தில் தான் மாணவர்கள் நலனுக்கான திட்டங்கள் அதிக எண்ணிக்கையில் செயல்படுத்தப்பட்டு வருவதாக உணவு அமைச்சர் திரு. சக்கரபாணி கூறியுள்ளார்.

கிருஷ்ணகிரி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி அவர் பேசினார்.

மாணவர்களின் நலனுக்காக தமிழக அரசு செயல்படுத்தி வரும் புதுமைப்பெண் திட்டம், இலவச பேருந்து பயணம் பெரும் வரவேற்பை பெற்றிருப்பதாகவும் திரு. சக்கரபாணி தெரிவித்தார்.

**>>>><<<<**

பெண்களின் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையிலும் மாநில மகளிர் ஆணையம் செயல்பட்டு வருவதாக சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் இந்த ஆணையத்திற்கான இணையதளத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

மாநில மகளிர் ஆணையம் கடந்த 2008ஆம் ஆண்டு முதல் சட்டரீதியான அமைப்பாக செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மகளிர் ஆணையத்தை எளிதாக அணுகும் வகையில் இந்த இணையதளம் தொடங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

**>>>><<<<**

முந்தைய அஇஅதிமுக ஆட்சியில் சட்டப்பேரவைக்குள் குட்கா கொண்டு சென்றது தொடர்பான உரிமை மீறல் நோட்டீசுக்கு விளக்கம் அளிக்கும்படி முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மற்றும் திமுக சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுக்களை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. எஸ்.எம்.

சுப்பிரமணியம், திரு. குமரப்பன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

சட்டப்பேரவை விதிகளுக்கு உட்பட்டு, விசாரணை நடத்தி உரிமைக் குழு இதில் இறுதி முடிவு எடுக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பணிக்கான கல்விச் சான்றிதழை சரிபார்ப்பதில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த முறைகேடுகள் காரணமாக, போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்ற 127 பேருக்கு வேலை மறுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு காரணமான அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

>>>><<<<

தமிழகத்தில் மலையிடைப் பகுதியில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்துவதற்கான காலஅவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

இதன்படி, 20. 10. 2016 அல்லது அதற்கு முன்னர் விற்பனை செய்யப்பட்ட மற்றும் விற்பனை செய்யப்படாத மனைப்பிரிவுகளுக்கு இது பொருந்தும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதற்கான காலஅவகாசம் நவம்பர் மாத இறுதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இறுதி வாய்ப்பினை சம்பந்தப்பட்டவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

>>>><<<<

நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளுக்கு உட்பட்ட ஒரு சில இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கன முதல் மிககனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரை 36 செகண்ட்ஸ்)

**>>>><<<<**

மாவட்டச் செய்திகள்

காவிரியாற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக, நாமக்கல் மாவட்டம், குமாரப்பாளையம் மற்றும் ஈரோடு மாவட்டம், பவானியை இணைக்கும் பாலக்கரை பகுதியில் உள்ள பழைய பாலத்தில் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

**>>>><<<<**

திருப்பத்தூர் மாவட்டத்தில் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ், திடக்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு, சுத்திகரிப்பு செய்யப்படுவதை ஆட்சியர் திரு. தர்பகராஜ் இன்று ஆய்வு செய்தார்.

**>>>><<<<**

விளையாட்டுச் செய்திகள்

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் **Swapnil Kusale** இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஆடவர் 50 மீட்டர் பிரிவில் இறுதிச்சுற்றுக்கான தகுதிச்சுற்றில் பெற்ற கூடுதல் புள்ளிகளின் அடிப்படையில் அவர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

மகளிர் குத்துச்சண்டை போட்டியில் **Lovlina Borgohain** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

75 கிலோ எடைப்பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் நார்வேயின் **Sunniva Hofstad**-ஐ வென்றார்.

பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் லக்ஷயா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் அவர், 21-18, 21-12 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் **Jonathan Christie-**யை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் பி.வி. சிந்து-வும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் அவர், 21-5, 21-10 என்ற செட்கணக்கில் எஸ்டோனியாவின் **Kristin Kuuba-**வை வென்றார்.

**>>>>END<<<<**